**<u>சுருக்கம்</u>**

பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி – கணினி பயிற்றுநர் – 1880 தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது – 01.01.2016 முதல் 31.12.2016 வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**<u>பள்ளிக்கல்வி [ப.க2(2)]த் துறை</u>**

அரசாணை (1டி) எண். 50

நாள் : 08 .02. 2016
திருவள்ளுவராண்டு 2047
தை மாதம் 25 ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.187,பள்ளிக்கல்வி (மேநிக2) துறை, நாள் 4.10.2006.
2. அரசாணை(நிலை)எண்.263, நிதி(ஊதியக் குழு) துறை, நாள் 22.07.2013.
3. அரசாணை(1டி) எண்.186, பள்ளிக் கல்வி(ப.க2(2)த் துறை, நாள்–05.06.2015.
4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித எண்.089715/ எல்3/2015, நாள் – 29.12.2015

************

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வித் திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்த பள்ளி ஒன்றுக்கு ஒரு கணினி பயிற்றுநர் பணியிடம் வீதம் (Computer Instructor), அனைத்து அரசு/நகராட்சி/மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலும் 1880 கணினி பயிற்றுநர் பணியிடங்கள் ரூ.5500–175–9000 என்ற ஊதிய விகிதத்தில் தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்காணும் கணினி பயிற்றுநர் பணியிடங்களுக்கு புதிய ஊதிய விகிதத்தில் PB2-ரூ.9300 – 34800 என்ற திருத்திய ஊதிய நிலையுடன் ரூ.4600/– தரஊதியம் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மேற்காண் பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் 31.12.2015வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. மேற்காணும் 1880 கணினி பயிற்றுநர் தற்காலிக பணியிடங்களின் தொடர் நீட்டிப்புக் காலம் 31.12.2015 உடன் நிறைவு பெறுவதால், இப்பணியிடங்களுக்கு 01.01.2016 முதல் மேலும் 5 ஆண்டுகள் தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிடுமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 1880 கணினி பயிற்றுநர் தற்காலிக பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட தொடர் நீட்டிப்பு 31.12.2015 உடன் முடிவடைந்த நிலையில், இப்பணியிடங்களுக்கு 01.01.2016 முதல் 31.12.2016 வரை ஓராண்டிற்கு அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில்

முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேற்காணும் பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

அரசு பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு :

2202 – பொதுக்கல்வி – 02 – இடைநிலைக்கல்வி–109–அரசு இடைநிலைப்பள்ளிகள்–I திட்டத்தில் சேராதது–AA-அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் 01–சம்பளங்கள்.

(த.தொ.கு 2202–02–109– AA-0108)

நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு :

2202 – பொதுக்கல்வி – 02– இடைநிலைக்கல்வி – 109–அரசு இடைநிலைப்பள்ளிகள்–I திட்டத்தில் சேராதது–AB- நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் –01 சம்பளங்கள்.
(த.தொ.கு 2202–02–109– AB-0106)

சமூக நலத்துறை சார்ந்த பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு :

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 103–மகளிர் நலன்– I திட்டத்தில் சேராதது –AN –மாவட்டங்களில் உள்ள சேவை இல்லங்கள் –01 சம்பளங்கள்.

(த.தொ.கு. 2235 – 02 – 103–AN - 0105)

ஆதிதிராவிடர் நலத்துறை சார்ந்த பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு :

(i). 2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி I திட்டத்தில் சேராதது – AA-பள்ளிக்கல்வி – 01 சம்பளங்கள்.

(த.தொ.கு.2225–01–277– AA - 0107)

(ii). 2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – I திட்டத்தில் சேராதது – AA-பள்ளிகள்– 01 சம்பளங்கள்.

(த.தொ.கு.2225–02–277– AA - 0106)

வனத்துறை சார்ந்த பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு :

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி I திட்டத்தில் சேராதது – AP-பழங்குடியினர் நலப்பள்ளி 01– சம்பளங்கள்.

(த.தொ.கு.2225–02–277– AP- 0106)

<u>கள்ளர் (மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை) சார்ந்த பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு :</u>

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 பொது – 101 சீர் மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் I திட்டத்தில் சேராதது AE–சீர் மரபினர் பள்ளிகள் 01–சம்பளங்கள்

(த.தொ.கு.2225–80–101–AE–0105)

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.6109/Edn-II/2016, நாள்–04.02.2016ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பள கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.
<u>நகல்</u>
நிதிக் (கல்வி II)துறை, சென்னை–9.
அ.ந.மு. பிரிவு, சென்னை–9

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர் 8/2/16